# Salve Regina



SOCIETY OF ST. PIUS X

அக்டோபர் 2007

மலர்: 2 இதழ்: 10

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

## கிறீஸ்து இராஜா வாழ்க!



*Instaurare Omnia in Christo*

# TOLLE ET LEGE !
# எடுத்து, வாசி!

சேசு கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

நமது "Salve Regina" பத்திரிகை புதிய தோற்றத்துடனும், பொலிவுடனும் காணப்படுவதை அறிவீர்கள். அதற்கு பெரும் உதவியாக இருந்தது கம்ப்யூட்டர் என்றால் மிகையாகாது. இந்த நவீன உலகில் நாம் விரும்பும் குறிப்புகளை, செய்திகளை நேர்த்தியாக வடிவமைத்து மிக விரைவாக, குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு இந்த "பொறி" – இயந்திரம் உதவியாக இருக்கிறது. அதே சமயம் கம்ப்யூட்டர் மற்றும் தொலைக்காட்சியின் மூலமாக விளையும் நாசங்களும், கேடுகளும் ஏராளம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இன்று இவைகள் பெரும்பாலும் "சாத்தானின்" கருவியாகத்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றால் உலகெங்கும் ஆபாச ஒழுக்கக்கேடுகள் பெருகி வருகிறது என்பது நாம் கண்கூடாகக் காணும் மறுக்க முடியாத உண்மை. அவை மறைவான – நுணுக்கமான முறையில் நமது கிறீஸ்தவ ஞான வாழ்வுக்கு கொண்டு வரும் பாதிப்பை யாரும் கவனிப்பதில்லை. எப்படியெனில் இன்று ஞானவாசகங்களை வாசிப்பது, ஒழுக்க நெறிகளைப் போதிக்கும் புத்தகங்களை படிப்பது என்பது போன்ற நல்ல பழக்கங்கள் பெருமளவில் குறைந்து விட்டன.

இது எந்த அளவிற்கென்றால், வட அமெரிக்காவில் பள்ளிப்பருவத்தைத் தாண்டியவர்களில் 58 சதவீதத்தினர் புத்தகம் வாசிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் என்றும், 2001-ல் ஒரு அமெரிக்கர் சராசரியாக ஒரு நாளில் 4.1 நிமிடங்களை மட்டுமே புத்தகங்களை வாசிப்பதில் செலவிடுகிறார் என்றும், கடந்த ஆண்டில் 80% அமெரிக்கக் குடும்பங்கள் எந்த ஒரு புத்தகத்தை வாங்கவோ அல்லது வாசிக்கவோ இல்லை என்று ஆண்டு ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஆதாரம்: Jerrold Jenkins Group.com)

வளர்ச்சியடைந்த நாட்டிலேயே அப்படியென்றால், பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்ட நமது நாட்டில் எந்த அளவிற்கு புத்தகங்களைப் படிக்கும் வழக்கம் குறைந்திருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டாம். இது பொதுவானது என்றால், கத்தோலிக்க மக்களிடம் நல்ல ஞான நூல்களைப் படிக்கும் வழக்கம் இல்லாமல் போய் விட்டது! இதற்கு காரணம், நவீன முற்போக்குச் சிந்தனை மற்றும் இயந்திரமயமான வாழ்வு மட்டுமல்லாது; நல்ல ஞானப்புத்தகங்களை வாசிப்பதால் ஏற்படும் நன்மைகளை அறியாத நிலையுமேயாகும்.

சங். ஃபேபர் சுவாமி தமது "ஞான உரைகள்" என்ற நூலில் "சிந்திக்கும் திறனுக்கு அடுத்ததாக ஞான நூல்களை வாசிப்பதானது உள்ளரங்க ஞான ஜீவியத்திற்கு, சுபாவத்திற்கு அடுத்த உபாயங்களில் முக்கியமானதாக உள்ளது. சுபாவத்திற்கு மேலான (Supernatural order) காரியங்களில் "வரப்பிரசாதம்" (Grace) எந்த அளவிற்குச் செயல்படுகிறதோ அதுபோலவே நல்ல புத்தகங்களை வாசிக்கும் நம்மை, வீண் கற்பனைகளுக்கோ, சோம்பேறித்தனத்திற்கோ இடங்கொடாதவாறு தடுக்கிறது. சோம்பேறித்தனத்தில் காலத்தைச் செலவிடுவது சாத்தானுக்குச் சாதகமாகிப் போய்விடும். ஆனால் அந்த நேரங்களில் நல்ல ஞான நூல்களை வாசித்து சாத்தானின் சோதனைகளையும், அவனது சூழ்ச்சி தந்திரங்களையும் நாம் வெல்லலாம். ஆகவே, பாவசோதனைக்கு தகுந்த மாற்று நல்ல நூல்களைப் படிப்பதே!

அர்ச். ஜெரோம், சால்வாரியா என்ற தனது ஞானமகளுக்கு அசுத்த நினைவுகளிலிருந்தும், தீய எண்ணங்களிலிருந்தும் தன்னையே காப்பாற்றிக்கொள்ள நல்ல ஞானப்புத்தகங்களை எப்போதும் கைவசம் வைத்து வாசிக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். இதனையே தான் அர்ச். பிரான்சிஸ் சலேசியாரும் "பக்த ஆன்மாவுக்காக" எழுதிய தனது "பக்தி நெறி வழிகாட்டி" (An Introduction to Devout Life) என்ற நூலில் "... பக்திக்கடுத்த சில புத்தகங்களை எப்பொழுதும் உன் அருகில் வைத்து ஒவ்வொரு நாளும் அவற்றிலிருந்து சில பகுதிகளைப் படிப்பது நல்லது..." என்று ஆலோசனைக் கூறியுள்ளார்.

ஞான நூல்களை வாசிக்கும் பழக்கத்தின் மூலம் நாம் நம்மை பொறாமை, பிறர்சிநேகத்திற்கு விரோதமானப் பேச்சுக்கள், வீண் சந்தேகங்கள், தேவையற்ற தாமதங்கள், தற்பெருமையான சொற்கள் போன்றவற்றை நீக்கி புண்ணியத்தில் வளர்ந்து நமது ஆத்துமத்தை இரட்சித்துக்கொள்ள உதவுகிறது. "நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் ஒருவனுக்கு ஜெபம் செய்வதற்கும், புண்ணிய வழியிலே முன்னேறிச் செல்வதற்கும் பெரிதும் உதவுகிறது" என்கிறார் அர்ச். பெர்னார்டு. ஆம்! நல்ல நூல்களை வாசிப்பதானது ஒருவனை உத்தமனாக்குகிறது. பம்பலூனா சண்டையில காயப்பட்ட வீரமிக்க இனிகோ சிகிச்சை பெறும் நாட்களில் வாசித்த அர்ச்சிஷ்டவர்களின் வரலாறுகள் அவரை அர்ச். இஞ்ஞாசியாராக ஆக்கியது! பதிதராகவும், பாவியாகவும் வாழ்ந்த அகுஸ்தீனாரை மனந்திருப்பி அவரது உள்ளத்தில் ஒலித்த "**எடுத்து வாசி! எடுத்து வாசி!!**" என்ற சிறுவனின் குரலொத்த ஒலிக்கு செவிமடுத்து புதிய ஏற்பாட்டு நூற்களை வாசித்ததால், இன்று அகில திருச்சபையும் போற்றும் வேதபாரகராக, அர்ச்சிஷ்டவராக அவர் திகழ்கின்றார்!

பக்திக்கடுத்த புத்தகங்களும், வேதாகமங்களும் நம்மை சர்வேசுரனின் குரலைக் கேட்கச் செய்யும் வாய்க்காலாகத் திகழ்கின்றன. அவை நம்மை மோட்சப் பாதைக்கு அழைத்துச் செல்லும் கருவியாகத் திகழ்கின்றன என்றால் அது மிகையாகாது. அதனால் தான் அர்ச். பிரான்சிஸ் சலேசியார் "மோட்சத்திற்கு செல்லும் பாதையில் உனக்கு வெளிச்சம் தருவதற்காக, அர்ச்சிஷ்டவர்கள் உனக்கு அனுப்பி வைத்த தூதுக் கடிதங்கள் தான் ஞான நூல்கள் என்பதை உணர்ந்து அவற்றால் பயனடைய முயற்சி செய்" என்கிறார்.

**(தொடர்ச்சி 9-ம் பக்கம் காண்க)**

# கிறீஸ்து அரசர்!

**"ஆண்டவர் என்றென்றைக்கும் இராஜாவாக வீற்றிருப்பார்; ஆண்டவர் தமது பிரஜைகளுக்குச் சமாதானத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பார்..."** (சங். 28:10-11)

**1976**-ம் ஆ ண்டு மார்ச் 31-ம் நாள் சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகரான பெர்னில் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதர் (Nuncio) ஆக இருந்த மார்ச்சியோனி என்ற மேற்றிராணியாருக்கும், அதிமேற்றிராணியார் மார்சல் லெஃபவர் ஆண்டகைக்கும் நடந்த உரையாடல் பின்வருமாறு இருந்தது:

**அதிமேற்:** "...சில அபாயகரமான காரியங்களை நாம் சுலபமாக கண்டு பிடிக்கலாம். 2-ம் வத்திக்கான் சங்கத்தின் "மத சுதந்திரம்" பற்றிய பிரகடனத்தில் இதுவரையிலும் பாப்புமார்களால் போதிக்கப்பட்டு வந்தவைகளுக்கு எதிரான கருத்துக்கள் இருக்கின்றன. இனிமேல் கத்தோலிக்க நாடுகள் என்பதே இருக்கக் கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது போலும்!"

**தூதர்:** "ஆம், அது அப்படித்தான்!"

**அதிமேற்:** "கத்தோலிக்க நாடுகளே இல்லாமல் ஆக்குவது திருச்சபைக்கு ஏதேனும் நன்மை விளைவிக்கும் என்று நினைக்கிறீர்களா?"

**தூதர்:** "ம்... நாம் அப்படி செய்தால் மட்டுமே, சோவியத் ரஷ்யாவிடமிருந்து நாம் அதிக மதச்சுதந்திரத்தை பெற முடியும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" (அங்கு கிறீஸ்தவர்கள் கலாபனைக்குட்பட்டிருந்தனர்).

**அதிமேற்:** "அப்படியானால், கிறீஸ்துநாதருடைய சமூக அரசாட்சியைப் பற்றிய உங்கள் நிலை என்ன?"

**தூதர்:** "ஆ! அது இப்பொழுது நடக்காத ஒன்று. ஒருவேளை எதிர்காலத்தில் அது நடைபெறலாம்? தற்போது, அவருடைய அரசாட்சி தனிப்பட்டவர்களிடம் மட்டும் தான்..."

**அதிமேற்:** "அப்படியென்றால், 'Quas Primas' சுற்று மடலின் பயன்தான் என்ன?"

**தூதர்:** "ஓ.. பாப்பானவர் இனி ஒருபோதும் அப்படி எழுத மாட்டார்!" (ஆதாரம்: "They have uncrowned Him" - Angelus Press)

• • • • • • • • • •

மேற்கண்ட உரையாடல் 1976-ல் நடந்தது! அன்றே திருச்சபை இருந்த அவல நிலை இது! இப்படிப்பட்ட நவீன சபையால் உருவாக்கப்பட்ட குருக்கள், குருமாணவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள்?

ஆம்! 2-ம் வத். சங்கத்தின் கனிகளில் இதுவும் ஒன்று!! தங்களுடைய அரசரின் மகுடத்தை தாங்களே பறித்தெடுக்கும் கேவலமான நிலை! இப்படிப்பட்ட நவீன காலத்தில் இருக்கும் விசுவாசிகளுக்கு, திருச்சபையின் பாரம்பரியப் போதனைகள் எட்டாத ஒன்றாகவுள்ளன. சத்தியத்தையே மட்டும் போதிக்கும் – மெய்யான தேவனுக்கு மட்டுமே ஊழியம் செய்யும் தங்களது கடமைகளை மறந்து விட்டு, வீண் சமய சமத்துவம், விடுதலை இறையியலைப் போதிக்கும் "சங்கச் சபையின்" நவீன ஆயர்கள், குருக்களிடமிருந்து சத்தியத் திருச்சபையின் உண்மையான குரலைக் கேட்க நினைப்பது ஏமாற்றத்தையே தரும். இந்தச் சூழ்நிலையில் சத்தியத்தையேப் போதித்து, நமதாண்டவரின் இராஜரீகத்தைப் போற்றும் பாப்பரசர் 11-ம் பத்திநாதரின் 'Quas Primas' என்ற உந்நதமான சுற்றுமடலின் சாரத்தை இங்கு தருவது பலன் அளிக்கும் என்று நம்புகிறோம். அதோடு நமது கிறீஸ்து அரசரின் தெய்வீகத்தையும், இராஜாங்கத்தையும் பழித்து – புறக்கணிக்கும் நவீனர்கள், நாத்தீகர்களின் அடாத செயல்களுக்குப் பரிகாரம் செய்யும் எண்ணத்தோடும் இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

## உலகத் தீமைகளுக்கான காரணம்:

உலகத்தில் இன்று மனித சமுதாயம் அனுபவித்துக் கொண்டிருக்கும் துன்பங்களுக்கு முக்கிய காரணம், பெரும்பான்மையான மனிதர்கள் சேசு கிறீஸ்துவையும் அவரது பரிசுத்தக் கற்பனைகளையும் (சட்டங்களையும்) தங்கள் வாழ்விலிருந்து அகற்றி விட்டதேயாகும்! ஆகையால் நமதாண்டவருக்கும், அவரது சட்டங்களுக்கும், மனிதர்களின் தனிப்பட்ட மற்றும் பொதுவாழ்விலும் எந்த இடமும் இல்லாமல் போய்விட்டது. தனிப்பட்ட மனிதனும், நாடுகளும் நமது இரட்சகருடைய அரசாட்சிக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தாத வரையிலும் மனிதரிடமும், உலக நாடுகளிடையேயும் நீடித்த சமாதானம் நிலவும் என நாம் நம்புவதற்கில்லை. மனிதர்கள் கிறீஸ்துவின் சமாதானத்தை **"கிறீஸ்துவின் இராச்சியத்தில் தான் தேட வேண்டும்"** (Pax Christi in Regno Christi). சமாதானத்தை திரும்ப கொண்டு வருவதற்கு, அதை உறுதியாகக் கட்டி எழுப்புவதற்கு நமதாண்டவரின் இராச்சியத்தை திரும்ப கொண்டு வருவதைத் தவிர வேறு வழி இல்லை.

இந்த இராச்சியத்தை திரும்ப கொண்டு வர செய்யப்படும் முயற்சிகளில் ஒன்று: கிறீஸ்து அரசரின் மகிமைக்காக திருநாள் கொண்டாடி அவரது அரசைப் பற்றி விசுவாசிகளுக்கு எடுத்துக் கூறுவதாகும்.

## கிறீஸ்துவின் இராஜரீகம் பறைசாற்றப்படுகிறது:

சேசு கிறீஸ்துவுக்கு, அனைத்து சிருஷ்டிகளுக்கும் மேலாக மிக உந்நதமான, உத்தமதனத்தை உருவகப்படுத்த (Metaphorical) "**இராஜா**" என்ற பட்டம் சூட்டுவது நீண்ட காலமாக இருந்து வரும் பழக்கமாகும். அவர் தன்னுடைய அளவற்ற புத்திக்கூர்மையினாலும், ஞானத்தின் விசாலத்தினாலும் அனைவருடைய இருதயங்களையும் ஆட்சி செய்கிறார். மேலும் அவரே "சத்தியமாக" இருப்பதால் இவரிடமிருந்தே மனித சமுதாயம் தாழ்ச்சியோடு சத்தியங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர் தனது வரப்பிரசாதத்தினாலும், தூண்டுதல்களினாலும் நம்முடைய மனச்சுதந்திரத்தை உயர்வானச் செயல்களைச் செய்வதற்கு அழைப்பதினாலும், தனது சிநேகத்தினாலும் நமது சித்தத்தை ஆட்சி செய்கிறார்.

## வேதாகமத்தில் கிறீஸ்து அரசர் பற்றிய குறிப்பு:

கிறீஸ்துவானவர் அரசராக இருக்கிறார் என்பது வேதாகமத்தில் அநேக இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கே காண்போம்:

(1) "... ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது " (லூக். 1:32-33).

( 2 ) தேவனே! உமது சிங்காசனம் என்றென்றைக்கு முள்ளது; உமது இராச்சியத்தின் செங்கோல் நேர்மையான செங்கோலாம்..." (சங். 44:7).

வேதாகமங்களில் தீர்க்கத்தரிசிகள் சேசு கிறீஸ்துவின் அரசதன்மைக்கு சான்று பகர்வதையும் காண்போம்: "ஏனெனில் ஒரு பாலன் நமக்குப் பிறந்தார், சுதன் நமக்கு அளிக்கப்பட்டனர்; **அவர் தம் தோள் மீது தமது அரசாட்சியது அடையாளத்தைக் கொண்டிருப்பார்;** அவர் அதிசயர் எனவும், புத்திப் பிரபோதகர் எனவும், தேவர் எனவும், வல்லமை பொருந்தியவர் எனவும், எதிர்கால பிதாவெனவும், சமாதானப் பிரபு எனவும் அழைக்கப்படுவர்..." (இசை. 9:6). சுவிசேஷத்தில் மங்கள வார்த்தையின் போது தேவதூதன் "...அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார். ஆண்டவராகிய **சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார்,** ஆதலால் **அவர் யாக்கோப்பின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்.** அவருடைய ஆட்சிக்கு முடிவு இராது" என்றார் (லூக். 1:32).

வேதாகமங்களின் பொது போதனையை முன்னிட்டு, இவ்வுலகில் கிறீஸ்துவின் இராச்சியமாகத் திகழும் கத்தோலிக்கத் திருச்சபை, தன்னை ஸ்தாபித்தவரை எல்லா வகையிலும் வணங்கி திருவழிபாட்டில் இராஜாதி இராஜனாகத் ஆராதிப்பது மெய்யாகவே நீதியாகும்.

## கிறீஸ்து இரண்டு வகைகளில் அரசராக இருக்கிறார்:

(1) **இயல்பால் அரசர்:** அர்ச். அலெக்ஸாண்டிரியா சிரில் உரைப்பது போல, "கிறீஸ்து அனைத்து படைப்புகளின் மேலும் அதிகாரம் படைத்தவராய் இருக்கிறார். இவ்வதிகாரம் பலவந்தத்தினாலோ அல்லது அநியாயமாகவோ பெறப்பட்டது அல்ல; ஆனால், தன்னுடைய சத்துவத்தாலும், சொந்த இயல்பினாலும் அவர் இந்த அதிகாரத்தைக் கொண்டவராக இருக்கிறார்". அவருடைய இராஜரீகம் அவருடைய **ஆளுக்கடுத்த ஒன்றிப்பில்** (Hypostatic Union) ஊன்றியிருக்கிறது. ஆகவே **கிறீஸ்துவானவர்** சகல சம்மனசுக்களாலும், மானிடர்களாலும் ஆராதிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், **மனிதன்** என்ற முறையிலும் அவருக்கு சம்மனசுக்களும், மானிடர்களும் பணிந்து ஊழியம் செய்து அவருடைய இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) **இரட்சகர் என்பதால் அரசர்:** கிறீஸ்து நமது இரட்சகர் என்ற முறையிலும் நமது இராஜாவாயிருக்கிறார். அழிந்து போகும் பொருட்களால் அவர் நம்மை மீட்கவில்லை. மாறாக தம்முடைய சொந்த விலைமதிப்பில்லா இரத்தத்தால் நம்மை இரட்சித்தார்! நம்மை பெரும் விலை கொடுத்து அவர் கிரயத்திற்கு வாங்கியிருப்பதால் நாம் நமக்கு சொந்தமானவர்கள் அல்ல; ஆனால் கிறீஸ்துவின் சொந்த அவயங்களாக இருக்கிறோம்.

## கிறீஸ்துவின் இராஜரீகம் எதில் அடங்கியிருக்கிறது?

இது அரசத்துவத்தின் மூன்று முக்கிய அம்சங்களிலான அதிகாரத்தைக் கொண்டிருத்தலில் அடங்கியிருக்கிறது. மேலே குறிப்பிட்ட வேதாகமச் சான்றுகளும் இதைத்தான் வெளிப்படுத்து கின்றன. கிறீஸ்துவானவர் மனிதர்களுக்கு இரட்சகராக மட்டு மல்லாமல் சட்டம் பிறப்பிப்பவராகவும் (Legislator) இருக்கிறார் என்பது விசுவாச சத்தியம். "வேதப்பிரமாணத்தைக் கொடுத்தவரும், நடுத்தீர்க்கிறவரும் (Judicial Power) ஒருவரே, அவரே அழிக்கவும், இரட்சிக்கவும் வல்லவர்" (யாக. 4:12) இவ்வுரிமையில் சன்மானம் அளிக்கும் அதிகாரமும், தண்டனை வழங்கும் அதிகாரமும் அடங்கும். இதைத் தவிர, இயற்றிய சட்டத்தை, வழங்கிய தீர்ப்பை செயல்படுத்தும் அதிகாரத்தையும் (Executive Power) சேசுநாதர் கொண்டிருக்கிறார். ஆகவே அனைவரும் அவருடைய கட்டளைகளை கடைப்பிடித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

## ஞான இராச்சியம்:

நமதாண்டவருடைய இராச்சியமானது ஞான இராச்சிய மாகும். இதனால்தான், அப்போஸ்தலர்களும், யூதர்களும் மெசியாவானவர் இஸ்ராயேல் மக்களின் சுதந்திர இராச்சியத்தை மீட்க அரசராக வருவார் என்ற தங்கள் எண்ணத்தை அநேகத் தடவைகளில் வெளிப்படுத்திய போது, அவைகளை மறுத்து, ஒதுக்கி வந்தார். மக்கள் கூட்டம் அவரைப் பிடித்து அரசராக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அவரை நெருங்கியதை அறிந்த அவர் அவர்களை விட்டு விலகி மறைந்தார். உரோமை ஆட்சியாளர்களிடம் தன்னுடைய இராச்சியம் இவ்வுலகைச் சார்ந்தது அன்று என்று அறிக்கையிட்டார். மனிதர்கள் இந்த இராச்சியத்தில் நுழைய பிரயாசைப்பட வேண்டுமென்று சுவிசேஷங்கள் கூறுகின்றன. விசுவாசத்தினாலும், ஞானஸ்நானத்தினாலும் மட்டுமே அதனுள் நுழைய முடியும். இவை வெளியரங்கச் சடங்காக இருந்தாலும், அவை உள்ளார்ந்த வரப்பிரசாதத்தின் பிறப்பைக் கொடுக்கிறது. சாத்தானின் – இருளின் இராச்சியத்தைத் தவிர வேறு எந்த இராச்சியத்தையும் கிறீஸ்துவின் இராச்சியம் எதிர்த்து நிற்பதில்லை.

(தொடரும்)

# தெய்வீக கிருபையால் நமக்குத் தரப்பட்ட காவல் சம்மனசுக்கள்!

"உன் சகல வழிகளிலும் உன்னைக் காக்கும்படி உனக்காக சர்வேசுரன் தம்முடைய சம்மனசுகளுக்குக் கட்டளையிட்டார். உன் பாதம் கல்லில் இடறாதபடி அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள்..." (சங். 90: 11 - 12)

### காவல் சம்மனசுக்கள் நமது நண்பர்கள்:



åம்பத்தக்கவர்களும், எந்நேரமும் நம்மோடு இருக்கும் உத்தமமான நண்பர்களுமாக பரலோகத்திலிருந்து நமக்கு அருளப்பட்டிருக்கிறார்களென்றால் அவர்கள் நமது காவல் சம்மனசுக்களே! சர்வேசுரன் தமது மேலான நன்மைத்தனத்தினால் நம்மைக் காக்கவும், வழிநடத்தவும், நம் பரலோக வீட்டிற்கு பத்திரமாக வந்து சேரவும் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சம்மனசானவரை கொடுத்திருக்கிறார்.

நமது துவக்கத்திலிருந்தே (நமது உற்பவத்திலிருந்தே) சம்மனசானவர் நம்முடன் இருக்கிறார். நாம் சர்வேசுரனின் படைப்பாக இவ்வுலகில் வந்த பின்னர், ஞானஸ்நானத்தின் மூலமாய் அவருடைய சுவீகாரப்பிள்ளைகளாக மாறிய அந்த தருணத்திலிருந்து நாம் நம்முடைய காவல் சம்மனசுக்களுடைய மிகப் பிரியமுள்ள நண்பர்களாக மாறினோம். தொட்டில் முதல் கல்லறை வரைக்கும், ஏன்? உத்தரிக்கிற ஸ்தலத்திற்குப் போனாலும் அங்கும் நம்மை விட்டுப் பிரியாமல் நமக்கு உதவுபவர் நமது காவல் சம்மனசானவர்தான். நாம் பாவம் செய்யும் போது இவர்களைப் போல நம்மில் அக்கறை கொண்டு, கவலைப்படுபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. நாம் மனந்திருந்தி, சர்வேசுரனுடன் மறுபடியும் ஒப்புரவு ஆகும் வரை அவர்கள் ஓயாமல் நம்மைத் தூண்டிக் கொண்டே இருப்பார்கள். நமது மகிழ்ச்சியான காலங்களில் நம்மோடு கூட சந்தோஷப்படும் அவர்கள், நம்முடைய துன்ப நாட்களில் நமக்காக மன்றாடி வருவார்கள்.

நமது ஜீவியத்தின் அந்தஸ்தை அறிய இவர்கள் நமக்கு உதவுகிறார்கள். அந்த அந்தஸ்தை அடைவதற்கும், அதில் நிலைநிற்பதற்கும் துணை புரிகிறார்கள். சுருங்கச் சொன்னால் நமது ஜீவியம் முழுவதிலும், ஏன்? கடைசி வரையிலும் கூட இருப்பவர்கள் இவர்கள்தான்.

### வேதாகமச் சான்றுகள்:

சம்மனசுக்கள் இருப்பதை வேதாகமம் பற்பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

1) "...உனக்கு முன் நடந்து உன் வழிகளில் உன்னைப் பாதுகாக்கிறதற்கும், நாமுனக்கு முஸ்திப்புச் செய்த ஸ்தானத்திற்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறதற்கும் இதோ நாம் ஒரு தூதனை அனுப்புவோம். அவரைச் சங்கித்திருக்கவும், அவருடைய வாக்குக்குச் செவி கொடுக்கவும், அவருக்குப் பயந்து நடக்கவும் கடவாய்; ஏனெனில் நீ பாவஞ் செய்தால் அவர் பொறுப்பதில்லை. நமது நாமம் அவரிடத்திலுண்டு. நீ அவரது வாக்குக்குச் செவி கொடுத்து நாம் திருவுளம்பற்றுகிறதெல்லாம் அனுசரிப்பாயாகில் நாம் உன் பகையாளிகட்குப் பகையாளியாகி உன்னை உபாதிப்பவர்களை உபாதிப்போம்..." (யா த். 23:20-22).

2) "...என்னைச் சகல தீமைகளினின்று மீட்ட (தேவ) தூதனும் இச்சிறுவர்களை ஆசீர்வதிப்பாராக..." (ஆதி. 48:16).

3) தோபியாஸ் ஆகமம் 5-ம் அதிகாரத்திலிருந்து 12-ம் அதிகாரம் வரையிலும் இரபாயேல் சம்மனசானவர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அதிலும் வெளிப்படையாக "...உள்ளபடி நான் யாரென்றால் கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக நிற்கும் ஏழு சம்மனசுக்களிலே நான் ஒருவன்; என் பேர் இரபாயேல் சம்மனசு என்றருளினார்..." (தோப்பியாஸ் 12:15).

4) "...இந்தச் சிறுவர்களில் ஒருவனையும் புறக்கணியாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் மோட்சத்திலே அவர்களுடைய சம்மனசுக்கள் பரமண்டலங்களிலேயிருக்கிற என் பிதாவின் சமூகத்தை இடைவிடாமல் தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்..." (மத். 18:10).

5) "...ஏனென்றால் என்னை ஆட்கொள்பவரும், நான் சேவிக்கிறவருமாகிய கடவுளுடைய தூதன் இன்று இராத்திரியிலே என் அருகில் வந்து நின்று: சின்னப்பா, நீ பயப்படாதே; செசார் இராயன் முன்பாக நீ நிற்க வேண்டும்..." (அப்.நட. 27:23-24).

## வேதபாரகர்களின் போதனைகள்:

திருச்சபையின் வேதபாரகர்களும், பிதாப்பிதாக்களும் சம்மனசுகள் இருப்பதை நமக்குப் போதிக்கிறார்கள். அவற்றில் சில:

✦ அர்ச். ஏரேணிமுஸ்: "ஒவ்வொரு ஆத்துமத்திற்கும் அதன் துவக்கத்திலிருந்தே ஒரு காவல் சம்மனசு நியமிக்கப்பட்டிருப்பதால், ஆத்துமம் எவ்வளவு மேன்மை மிக்கது என்பது புலப்படுகிறது".

✦ அர்ச். பெர்நார்டு: "என் சகோதரர்களே, சம்மனசுக்களை உங்கள் நண்பர்களாகக் கொள்ளுங்கள். நம்பிக்கையுடன் அவர்களை அண்டிச் சென்று, உங்கள் ஜெபங்களின் மூலமாக அவர்களை மகிழ்வித்து வாருங்கள். ஏனெனில், உங்களைக் காக்கவும், தேற்றவும் உங்களோடு என்றும் இருக்கிறார்."

## நமது விசேஷ காவலர்கள்:

நம்மை அளவற்ற விதமாக நேசிக்கும் நமது வானகத் தந்தையாம் சர்வேசுரன் நம்மை, நமது ஜீவியத்தில் ஒவ்வொரு நிலையிலும், சூழ்நிலையிலும் பாதுகாக்க விசேஷ காவல் சம்மனசுக்களை நியமித்துள்ளார்கள். குழந்தைகள் தங்களுக்கென்று ஒரு விசேஷ காவல் சம்மனசைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளை ஆபத்துகளிலிருந்தும், மாசற்றதனத்தைக் காப்பதிலும் உதவி செய்கிறார்கள். குழந்தைகள் இவர்களின் உதவியின்றி வளர்ந்து பெரியவர்களாக முடியாது என்று கூறப்படுகிறது. இக்கூற்றை உறுதிப்படுத்த குழந்தைகள் அதிசயமாகக் காப்பாற்றப்பட்ட எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன.

இதே போல் இளம் வயதினரைக் காப்பாற்ற குறிப்பாக ஒழுக்கக்கேட்டிலிருந்து பாதுகாக்கவென்று சம்மனசுக்கள் இருக்கிறார்கள். இளைஞர்களும், இளம் பெண்களும் பாவசந்தர்ப்பங்களும், ஒழுக்கக்கேடும் மலிந்திருக்கும் இன்றைய சூழ்நிலையில் தங்களுடைய காவல் சம்மனசுக்களின் உதவியுடன் பரிசுத்தத்தனமாகிய புண்ணியத்தைக் காத்து வர வேண்டும்.

## அர்ச்சிஷ்டவர்களின் பக்தி:

இவ்வாறு அநேக உதவிகளை செய்து நம்மைக் காத்து வரும் இப்பேர்பெற்ற உத்தமமான மேலான வஸ்துக்களான சம்மனசுக்களை நாம் வணங்கி சங்கித்து வர வேண்டும். அர்ச்சிஷ்டவர்கள் காவல் சம்மனசுக்களின் பேரில் மிகுந்த பக்தி கொண்டிருந்தார்கள்.

அர்ச். சவேரியார் தாம் மனந்திருப்பிய கிறீஸ்தவர்களை விட்டு பிரியும் வேளையில் அவர்களை அவ்வூர்களின் காவல் சம்மனசுக்களின் பாதுகாவலில் விட்டுச் செல்வார். அதே போல அர்ச். பிரான்சிஸ் சலேசியாரும், அவருடைய உறவினரும் கால்வினிஸப் பதிதர்களை மனந்திருப்ப அவர்களின் ஊர்களுக்குச் செல்லுகையில் அவ்வூரின் நுழைவு வாயிலில் முழங்கால்படியிட்டு அவ்வூரின் காவல் சம்மனசானவரின் உதவியை மன்றாடிய பின் தங்களுடைய அப்போஸ்தலிக்க அலுவலைத் தொடங்குவார்கள்.

இந்த அர்ச்சிஷ்டவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி நாமும் நம்முடைய காவல் சம்மனசானவர்களை நேசித்து, எப்போதும் அவர்களுடைய உதவிகளைப் பெற்று சர்வேசுரனின் சித்தத்தை அறிந்து செயல்படுத்துவோமாக!

## மோட்சமே எனக்கு வேண்டும்!

அர்ச். பெர்னார்டும் அவரது மூன்று சகோதரர்களும் உலகைத் துறந்து சந்நியாசிகளாக தீர்மானித்தனர். அவர்கள் புறப்படும் முன்பாக தந்தையின் ஆசிரைப் பெற தீர்மானித்து அவரிடம் போனார்கள். அங்கே தங்களது கடைசி தம்பி நிவார்து தன் வயது சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அவனிடம், "நிவார்து நாங்கள் போகிறோம். அப்பாவினுடைய திரண்ட சொத்துக்கள் அனைத்தையும் உனக்கே விட்டுச் செல்கிறோம்" என்று மூத்த அண்ணன் உரைத்தார்.

அதைக் கேட்ட நிவார்து உடனே அவரைப் பார்த்து, "என்ன! மோட்சத்தை நீங்கள் எடுத்துக் கொண்டு பூமியை எனக்கு விட்டு போகிறீர்களாக்கும். இது சரியல்ல. நானும் சீக்கிரம் உங்களைப் பின் செல்வேன்" என்று மொழிந்தான். அதன்படியே தக்க வயது வந்ததும், தனது சகோதரர்களோடு சேர்ந்து துறவியானான்.

## >VµßEBV_ >©ÃéVD!

ஒரு சமயம், அர்ச். அந்தோணியார் ஒரு காட்சியில் மக்களைக் கெடுத்து அவர்களை நரகத்தில் வீழ்த்தும்படி பசாசு விரித்திருந்த வலைகளாலும், கண்ணிகளாலும் பூமி நிறைந்திருப்பதைக் கண்டார். அதைக் கண்டு பயந்த அவர், "ஐயோ! இத்தனை ஆபத்துக்களிலிருந்து யாரால் தப்பிக்க முடியும்?" என்று கத்தினார். அப்போது தாழ்ச்சியுள்ளவர்களே தப்பிக்க முடியும் என்று ஒரு குரல் ஒலித்தது.

## பரிசுத்த கன்னிமரி வழியே கேட்பேன்!

பிரான்ஸ் நாட்டில் புகழ்பெற்ற மருத்துவரான ரெக்காமியேர் என்பவர் ஜெபமாலை மீது அதிக பக்தி கொண்டிருந்தார். எப்போதும் தம்முடன் ஜெபமாலையை வைத்திருப்பார். நோயாளிகளைச் சந்திக்கப் போகும்போதெல்லாம் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டே செல்வார். "நான் கொடுக்கும் மருந்துகள் பலன் தராவிட்டால், சகல நோய்களையும் குணப்படுத்தக்கூடியவரிடம் உதவி கேட்கிறேன். பரிசுத்த கன்னிமரியின் வழியாக அவரிடம் போகிறேன்" என்று அடிக்கடி சொல்வார்.

# அர்ச்சிப்பின் திரவியம் ஜெபமாலையே!

(ஜெபமாலை மிகவும் உந்நதமான ஜெபம். ஏனெனில்அதில் ஜெபிக்கப்படுகின்ற ஜெபங்கள் பரலோகத்திலிருந்து வந்தவை. இங்கே அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் எழுதிய **ஜெபமாலையின் இரகசியம்** என்ற நூலிலிருந்து சிலப்பகுதிகள் தரப்படுகின்றன. இது ஜெபமாலை ஜெபத்தை நன்கு ஜெபிக்க நமக்கு உதவும். – ஆசிரியர்)

ஜெபமாலையில் வரும் ஜெபங்களிலும் அதன் தேவ இரகசியங்களிலும் அடங்கியிருக்கும் நம் அர்ச்சிப்புக்கேதுவான வியப்புக்குரிய ஞான திரவியங்களை நாம் ஒருபோதும் முற்றும் அறிந்து கொள்ள முடியாது. நமதாண்டவரும் மீட்பருமான சேசு கிறீஸ்துவின் வாழ்வு, மரணம் இவை பற்றிய தியானம், அதைச் செய்கிறவர்களுக்கு மிக ஆச்சரியமான பலன்களை விளைவிக்கும் ஊற்றாயிருக்கிறது.

இக்காலத்தில் மக்கள் தங்கள் ஆன்மாவை அசைத்துக் குலுக்கி ஆழமான உணர்வுகளை ஏற்படுத்தும் காரியங்களைத் தேடுகிறார்கள். ஆனால் உலக சரித்திரத்திலேயே, ஜெபமாலையில் பொதிந்திருக்கும் வியப்புக்குரிய நம் மீட்பரின் வாழ்வு, மரணம், மகிமை போன்று ஆன்மாவை நெகிழச் செய்யும் வரலாறு வேறு கிடையாது. ஆண்டவரின் வாழ்க்கைத் திருநிகழ்ச்சிகளில் முக்கியமானவை எல்லாம் பதினைந்து தேவ இரகசிய நிலைக்காட்சிகளில் நம் கண்முன் நிறுத்தப்படுகின்றன. கர்த்தர் கற்பித்த ஜெபம், மங்கள வார்த்தை ஜெபம் இவற்றைவிட மிஞ்சிய வியப்பும் உந்நதமுமான ஜெபம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? நம்முடைய எல்லா விருப்பங்களும் எல்லாத் தேவைகளும் இந்த இரு ஜெபங்களிலும் காணப்படு கின்றனவே!

ஜெபமாலையில் வரும் தேவ இரகசியங்களைப் பற்றிய தியானமும் அதில் வரும் ஜெபங்களும்தான் மற்றெல்லா ஜெபங்களிலும் எளிதானவை. ஏனென்றால், அவற்றில் காணப்படும் நமதாண்டவரின் பலதரப்பட்ட புண்ணியங்களும் அவருடைய வாழ்வின் பல நிலைகளும் மிக அற்புதமான முறையில் நம் மனதிற்குப் புத்துணர்ச்சி ஊட்டி பராக்குகளைத் தவிர்ப்பதில் நமக்கு உதவியாயிருக்கின்றன. கல்வியுடையோருக்கு இத்திருநிகழ்ச்சிகள் மிக ஆழமான உண்மைகளின் ஊற்றாகின்றன. மற்ற சாதாரண மக்களுக்கு அவர்கள் சக்திக்கேற்ற ஞான அறிவையூட்டும் வழிகளா யிருக்கின்றன.

அன்பின் ஐக்கிய ஜெபத்தின் மிக உயர்ந்த நிலைக்குச் செல்லுமுன் இந்த எளிய முறையான தியானத்தை நாம் அறிந்திருக்க வேண்டும். இதுவே அர்ச். தோமாஸ் அக்வினாஸின் கருத்து. ஒருவன் முதலில் ஒரு போர்க்களத்தில் பயிற்சி பெறுவது போல, ஜெபமாலை நமக்கு எடுத்துக்காட்டும் எல்லாப் புண்ணியங்களையும் அடைய முயற்சிக்க வேண்டும் என்று அவர் ஆலோசனையாகக் கூறுகிறார். வேத அறிவிற் சிறந்த கயித்தான் என்பவர், "கடவுளுடன் நாம் உண்மையான நெருங்கிய ஐக்கியத்தை அடையும் வழி இதுவே. ஏனென்றால் (புண்ணியப் பயிற்சி) இல்லாமல் மேற்கொள்ளப்படும் ஐக்கிய ஜெபம், ஆன்மாக்களை தவறிப் போகச் செய்யும் ஒரு ஆபத்தான பொய்த்தோற்றமே" என்கிறார்.

இக்காலத்தில் "ஒளிபெற்றோர்" – "செயலற்றோர்" என்பவர்கள் இந்த ஆலோசனையைக் கடைபிடித்திருந்தால் அவர்கள் இவ்வளவு கீழ்நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். இத்தனை துர்மாதிரிகை காட்டி நன்மக்களின் பக்தியைக் கெடுத்திருக்கவும் மாட்டார்கள். பரலோக மந்திரத்தையும் அருள்நிறை மந்திரத்தையும் விட அதிக அழகும் உயர்ந்ததுமான ஜெபங்களைச் சொல்லமுடியும் என்று நினைப்பது பசாசின் விநோதமான ஒரு ஏமாற்றுக்கு உட்படுவதாகும்.

விண்ணிலிருந்து வந்த இந்த ஜெபங்கள் நம் ஆன்மாக்களுக்கு துணையும் பலமும் பாதுகாப்புமாக இருக்கின்றன. ஆனால் இவற்றை எப்போதும் வாய் ஜெபமாகவே செய்யவேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒரு வகையில் மன ஜெபம் வாய் ஜெபத்தைவிட சிறந்ததுதான். ஆனால் கடவுளுடன் அதிக உத்தமமான ஐக்கியத்தை தேடுகிறேன் என்ற காரணத்தைக் கூறி, ஜெபமாலை சொல்வதை தன் மனம் போல விட்டுவிடுவது உண்மை யிலே ஆபத்தான ஒன்று. அவ்வாறு செய்வதால் ஆன்மாவை இழக்கக்கூட நேரிடலாம்.

சில சமயங்களில், மிக நுட்பமான ஆங்காரமுடைய ஒரு ஆன்மா, அர்ச்சிஷ்டவர்கள் அடைந்த ஐக்கிய ஜெபத்தின் உந்நத நிலையை அடைவதற்குரிய எல்லாவற்றையும் செய்திருந்தாலும், நண்பகல் பசாசினால் தன் முந்திய பக்தி முயற்சிகளை விட்டு விடும்படி ஏமாற்றப்பட்டிருக்கக்கூடும். தான் ஒரு அதிக சிறந்த நன்மையை அடைந்து விட்டதாக அவ்வான்மா நினைக்கிறது. ஆகவே, முன்பு தான் கைக்கொண்டிருந்த பக்தி முயற்சிகளெல்லாம் கீழானவை, சாதாரண ஆன்மாக்களுக்கே அவை தகுதி என்று கருதுகிறது...


ஜெபமாலைப் பக்தசபை சகோதரர்களே! நான் கூறுவதை நம்புங்கள். உண்மையாகவே நீங்கள் ஒரு உயர்ந்த ஜெப நிலையை அடையவும், ஜெபிக்கிறவர்களுக்கு பசாசு வைக்கும் கண்ணிகளில் விழாமல் காப்பாற்றப்படவும் விரும்பினால், தினமும் ஒரு முழு ஜெபமாலை சொல்லுங்கள் – குறைந்த பட்சம் ஐம்பத்து மூன்று மணி ஜெபமாலையாவது சொல்லி வாருங்கள். தேவ அருளால் நீங்கள் ஒரு உயர்ந்த ஜெப நிலையை அடைந்திருந்தால் அதில் நிலைத்திருக்கவும், அதனால் தாழ்ச்சியில் வளரவும் நீங்கள் விரும்பினால் ஜெபமாலை பழக்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங் கள். ஏனென்றால், ஒவ்வொரு நாளும் ஜெபமாலை ஜெபிக்கிறவன் ஒருபோதும் பதிதனாக மாட்டான். பசாசினால் வழி தவறிப் போகவும் மாட்டான். இந்த உண்மைக்குச் சான்று பகர நான் மகிழ்ச்சியோடு என் இரத்தத்தால் கையொப்பமிட தயாராயிருக்கிறேன்...

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை



## அறிந்து கொள்வோம்!

[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]



கிருபை மன்றாட்டை தாழ்ச்சியோடு சொல்கிறார்

### பூசை ஆரம்பம் (தொடர்ச்சி)

### – பிரவேச வாக்கியம் –

### (The Introit)

பிரவேச வாக்கியம் பீடத்தின இடதுபுறத்தில் நிருபப்பக்கத்தில் சொல்லப்படுகிறது. தாழ்மை நிறைந்த உள்ளத்தோடு குருவானவர் கரங்களை மார்பில் குவித்தவாறு ஜெபிக்கும் வண்ணமாக இதனை வாசிக்கிறார். பூசையில் – பாடற்பூசையில் 4 பகுதிகளின் ஜெபங்களும், வாக்கியங்களும் பாடற் குழுவினரால் விசுவாசிகளின் பெயரால் அவர்கள் சார்பாக நிறைவேற்றப்படவிருக்கும் உந்நத மான நற்கருணைப் பலியோடு இசைந்து ஒன்றிப்பதற்காகப் பாடப் படுகின்றன. அவை: (1) குருவானவர் பீடத்தை நோக்கி ஏறிச் செல்லும்போது **பிரவேச வாக்கியமும்** (The Introit), (2) நிருபம் வாசிக்கப்பட்ட பின்னர் **படிக்கீதமும்** (Graduale), (3) விசுவாசிகள் தங்களது காணிக்கைகளை ஒப்புக்கொடுக்கும் போது **ஒப்புக் கொடுத்தல் வாக்கியமும்** (Offertorium), (4) அவர்கள் நன்மை உட்கொண்டபோது (Communio) **உட்கொள்ளுதல் வாக்கியமும்** பாடலாகப் பூசையின் 4 பகுதிகளில் பாடப்படுகின்றன. இசையாகப் பாடும் பழக்கம் 5–ம் நூற்றாண்டிலிருந்த ரோமன் திருச்சபையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனாலும் அதில் நன்மை உட்கொள்ளுதல் வாக்கியம் (Communio Chant) மிகவும் தொன்மையானது. பிரவேச வாக்கியம் பாடப்படும் பழக்கம் கடைசியாக அறிமுகப்படுத்தப்பட்டது. அர்ச். பெரிய கிரகோரியார் இவைகளை நன்கு வடிவமைத்து முறைப்படுத்தினார்.

இந்த பிரவேச வாக்கியம் திருவழிபாட்டு ஆண்டிற்கு தக்கவாறு கவனமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவை மகிழ்ச்சி, கவலை, புலம்பல், நம்பிக்கை, ஆன்மாவின் தேடல், பயம், புகழ்ச்சி, நன்றியறிதல், விண்ணப்பம் போன்ற ஆன்மாவின் ஒவ்வொரு ஞான மனப்பான்மைக்கேற்ப அவை மாறுபடும். இப்படியாக இந்த பிரவேச வாக்கியமே அன்றைய பூசையின் தன்மையை உணர்த்துவதாக அமையும்.

### கிருபை மன்றாட்டு (the Kyrie)

பிரவேச வாக்கியம் ஜெபிக்கப்பட்ட பிறகு குருவானவர் பீடத்தின் நடுப்பகுதிக்கு மெல்ல வருகிறார். மீண்டும் தமது பாவங்களையும், அதனால் தமது தகுதியின்மையையும் நினைக்கிறார். உள்ளம் நொறுங்குண்டவராக சற்றே தலையைத் தாழ்த்தி "Kyrie eleison... **சுவாமி கிருபையாயிரும்**" என்ற கிருபை மன்றாட்டை தாழ்ச்சியோடு சொல்கிறார். அதனையே பீடப்பரிசாரகனும் திருப்பிச் சொல்கிறான். இப்படியாக 9 தடவைகள் கிருபை மன்றாட்டு சொல்லப்படுகிறது. கிருபை மன்றாட்டு மூன்று, மூன்று தடவையாக ஜெபிப்பதற்கு உந்நதமான மறைபொருள் உள்ளது. அது என்னவெனில் மகா பரிசுத்த தமத்திரித்துவ தேவனை இறைஞ்சி மன்றாடி – பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து ஆகிய மூன்று ஆட்களை தனித்தனியாக தொடர்ந்து மன்றாடுதலைக் குறிக்கிறது. முதலில் பிதாவாகிய சர்வேசுரனுக்கு "Kyrie eleison - **சுவாமி கிருபையாயிரும்**" (3 தடவை), இரண்டாவது சுதனாகிய சர்வேசுரனுக்கு "Christe eleison - **கிறீஸ்துவே கிருபையாயிரும்**" (3 தடவை),

மூன்றாவது இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுக்கு **"Kyrie eleison - சுவாமி கிருபையாயிரும்"** (3 தடவை) யும் மன்றாடப் படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு தேவ ஆட்களுக்கும் மூன்று தடவைகள் சொல்லி மன்றாடுவதானது அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே தெய்வீக ஆளாக – தேவனாக – நித்தியத்திலும் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.

இப்படி 9 தடவைகள் கிருபை மன்றாட்டுக்களை ஜெபிப்பதன் வேறொரு பொருள் என்னவென்றால், மனிதர்கள் கட்டிக்கொள்ளும் 9 வகையான பாவங்களைக் குறித்தும், 9 வகையான தேவை (Needs) களைக் குறித்தும் சர்வேசுரனின் கிருபையை மன்றாடுவதற்காகவே!

கிருபை மன்றாட்டு 9 தடவைகள் ஜெபிக்கப்படுவதற்கு மற்றுமொரு காரணம், பூசையில் கண்களுக்குப் புலப்படாதவண்ணம் சூழ்ந்து ஆராதிக்கும் நவவிலாச சம்மனசுக்களின் கூட்டத்தினரோடு தாங்களும் இணைந்து பாடி தேவனை தோத்தரித்து அவரது கிருபையைப் பெற விரும்பும் விசுவாசிகளின் ஆவலையும் வெளிப்படுத்துவதே. அதோடு கிருபை மன்றாட்டின் போது, குருவானவர் தமது மோட்ச தந்தையின் இல்லத்தின் கதவுகளை 9 தடவைகள் தட்டி இரக்கத்தைப் பெறுதலையும் குறிப்பாக உணர்த்துகிறது.

இந்த Kyrie eleison என்ற மன்றாட்டு கிரேக்க மொழியி லிருந்து எடுக்கப்பட்டதாகும். இதற்கு "சுவாமி, கிருபையாயிரும்" – "Domine miserere" என்று பொருள். இந்த கிருபை மன்றாட்டு எல்லா பூசைகளிலும் சொல்ல வேண்டும். ஏன் பெரிய சனிக்கிழமையன்றும் கூட குருவானவர் இதனைச் சொல்லி மன்றாடுகிறார்.

குரு பீடத்தின் நடுவில் நின்று – அதுவும் பீடத்தில் உள்ள பாடுபட்ட சிலுவையின் முன்பாக நின்று இம்மன்றாட்டைச் சொல்வதானது, தமது இரங்கத்தக்க வறிய நிலையை உணர்ந்து விசுவாசிகளுக்காக – மனுக்குலத்திற்காக சர்வேசுரனின் கிருபையை வேண்டி ஜெபிப்பதைக் குறிக்கிறது.

குருவானவர் மற்றும் பீடபரிசாரகர் சேர்ந்து 9 தடவைகள் ஜெபிக்கும் கிருபை மன்றாட்டானது மூவொரு தேவனுக்கு இரக்கத்தின் விண்ணப்பங்களை பக்தியுடனும், தாழ்ச்சியுடனும், எளிமையுடனும் துயரத்திலிருந்தும் சர்வேசுரனின் தயவை பெறும் நிலையிலிருந்தும் இருதய அடித்தளத்திலிருந்து எழும் கூக்குரலாக ஒலிக்கிறது. சர்வேசுரனைக் கூவியழைத்து அவரது தயவை மன்றாடுவது, பழைய, புதிய ஏற்பாடுகளில் அநேக இடங்களில் காணப்படும் ஒன்றாகும். அதோடு தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு தேவ உதவியை இறைஞ்சி தவப்பவனியாக வரும் மக்களின் மன்றாட்டாகவும் இது உள்ளது.

### கிரேக்க மொழியில் ஏன்?

இந்த Kyrie eleison – கிருபை மன்றாட்டு கிரேக்க மொழியில் இருப்பதற்குக் காரணம், முன்னொரு காலத்தில் உதவி கேட்டு கீழ்த்திசை நாடுகளிலிருந்து மேற்திசை நாடுகளுக்குச் செல்வது மக்களின் வழக்கமாயிருந்தது. Kyrie eleison என்று இரக்கமாகக் கேட்பதென்பது மக்கள் அனைவராலும் ஏற்கப்பட்டு, விரும்பப்பட்ட சொற்களாக விளங்கியது. அந்த சொற்களையே சர்வேசுரனின் கிருபையை மன்றாட திவ்விய பலிபூசையின் கிருபை மன்றாட்டிலும் லத்தீன் மொழியாக்கம் செய்யாமல் பயன்படுத்தப்பட்டது.

அதோடு மற்றுமொரு காரணம் என்னவென்றால்: Kyrie eleison என்ற கிரேக்க மொழி சொற்களைத் தவிர ஆமென், அல்லேலூயா, சாபாவோத், ஓசான்னா போன்ற எபிரேய மொழிச் சொற்களும் லத்தீன் பூசை ஜெபங்களில் காணப்படுகின்றன. இவை அன்று கல்வாரியில் இரத்தம் சிந்தி நிறைவேற்றப்பட்ட பலியானது இங்கு ஆலய பீடங்களில் இரத்தம் சிந்தாதவகையில் நிறைவேற்றப்படும் வழிபாட்டிலும் இந்த மூன்று மொழிகள் இணைந்திருப்பதானது, அன்று கல்வாரியில் கிறீஸ்துவின் வல்லமை மிக்க சிலுவையில் மகிமையோடு எழுதப்பட்ட அறிக்கைப் பத்திரத்தில் "நசரேயனாகிய யேசு யூதர்களுடைய இராஜா" என்ற வாசகங்கள் இதே மூன்று மொழிகளில் தான் எழுதப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (காண்க அரு. 19:20)

( தொடரும்)

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்புள்ளவர்களே! நமது "Salve Regina" பத்திரிகை யானது தனது முதல் வயதினை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த சமயத்தில் அதிக ஞான நன்மைகளைப் பயக்கும் வகையில் விசுவாசிகளுக்கு அதன் பக்கங்களை சற்று அதிகரித்து சிறு மாற்றங்களுடன் வெளியிடப்படுகிறது. "Instaurare Omnia in Christo" – "சகலத்தையும் கிறீஸ்துவுக்குள் புதுப்பிக்க வேண்டும்" (எபேசி. 1:10) என்ற தமது விருதுவாக்கிற்கேற்ப கிறீஸ்து இராஜ்யம் நமது சமூகத்தில் புதுப்பிக்க – ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு அவரைப்பற்றிய சத்தியங்களை, அவரது தெய்வீகத்தை, அவரது போதனைகளை மனிதர் அறிய வேண்டும். அதற்கான அனைத்தையும் செய்யும் கருவியாக நமது "Salve Regina" செயல்படும்.

அன்பர்களே! இப்பத்திரிகையை உங்கள் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பரப்பி பாரம்பரிய விசுவாச சத்தியங்களை அவர்களும் அறியச் செய்யுங்கள். மேலும் நமது பத்திரிகை தொடர்ந்து வெளிவர உங்களது ஜெப, தப உதவியையும், நன்கொடைகளையும் தந்து ஆதரிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

# ¶ìß.¸«V [Eü Ä¼köBVì
# 2‡D kÝ. Äº ïÝ] [ x [¼ªV½BV?

விசுவாசப்பரம்புதல் ஞாயிறு சிறப்புக் கட்டுரை

சிந்து தேச அப்போஸ்தலர், கீழ்திசை நாடுகளின் விடிவெள்ளி என்றெல்லாம் அழைக்கப்படும் அர்ச். பிரான்சிஸ் சவேரியார் தனது தணியாத தேவ சிநேகத்தோடும், தளராத ஆன்ம தாகத்தோடும் சத்திய வேதத்தை அஞ்ஞான மக்களுக்குப் போதித்து அவர்களை சத்தியத்தின் துறைமுகத்திற்கு அழைத்து வந்தார். அதாவது 10 ஆண்டு கால அயராத கடும் உழைப்பால், இந்தியா, இலங்கை, மலாக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் மெஞ்ஞானம் தழைத்தது. அவரது அப்போஸ்தலிக்க ஆவலினால் கிறீஸ்துவின் ஒளியை எண்ணற்ற ஆன்மாக்களில் ஏற்றி வைத்து அவர்களின் இரட்சண்யத்திற்குக் காரணமாக இருந்ததால் அவரை சத்திய திருச்சபை வேதபோதக நாடுகளின் பாதுகாவலர் என்று அழைத்து, இன்னும் சேசு கிறீஸ்துவின் சுவிசேஷம் போதிக்கப்படாத நாடுகளை அவரது பாதுகாவலில் வைத்தது. அவரது தவறாத மன்றாட்டுக்களால் அநேக மனந்திரும்புதல்கள் நடைபெற்று வருவதை நாமறிவோம்.

ஆனால் இன்று சங்கச் சபை அர்ச். சவேரியாரின் உழைப்பை, அவரது ஆன்ம தாகத்தைக் கொச்சைப்படுத்தி வருகிறது. அதிலும் புராட்டஸ்டாண்ட் பதிதத்தை முறியடிக்கவென்றே அர்ச். இஞ்ஞாசியாரால் உருவாக்கப்பட்ட சேசு சபையினரே இன்று அவரை சிறுமைப்படுத்துவது நடக்கிறது. தப்பறைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் எழுதியும் அவர்கள் போதித்தும் வருவதை நாம் அறிவோம். சமீபத்தில் அப்படியொரு தாக்குதலை சேசு சபையின் பொது அதிபர் கொடுத்துள்ளது வேதனையளிப்பதாக உள்ளது.

அவரது தவறான கருத்துகளுக்கு மறுப்பு தெரிவித்து உண்மையை எடுத்துக் கூறி பரிகாரம் செய்வதும், வரவிருக்கும் விசுவாசப்பரம்புதல் ஞாயிறு (அக்டோபர் 21-ம் தேதி ) அன்று திருச்சபையில் உண்மையான பாரம்பரிய விசுவாச சத்தியங்கள் தழைக்கவும், ஏறக்குறைய நின்று போய்விட்ட வேத போதக அலுவல்கள் புத்துணர்வு பெற்று நடைபெற ஜெபிப்பதற்காகவே இக்கட்டுரை வெளியிடப்படுகிறது - ஆசிரியர்.

### அர்ச்.சவேரியார்
### 2-ம் வத். சங்கத்தின் முன்னோடியா!

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் "30 நாட்கள்" என்ற கத்தோலிக்க மாதப் பத்திரிகையில் அர்ச். பிரான்சிஸ் சவேரியாரின் 500வது பிறந்த நாள் நிறைவையொட்டி தற்போதைய சேசு சபையின் பொது அதிபர் சங். பீட்டர் ஹான்ஸ் கோல்வென்பாக் சுவாமி வழங்கிய பேட்டி வெளியிடப்பட்டது.

அதில் கேட்கப்பட்ட ஒரு கேள்வி இது: "கர்தினால் தூச்சி ஆண்டகை, சவேரியாரிடம் அவர் வாழ்ந்த காலத்தவர்களின் மனப்பான்மையே காணப்பட்டது என்றும், ஞானஸ்நானம் பெறாமல் யாரும் மீட்படைய முடியாது என்ற தமது முடிவிலேயே சவேரியார்



செயல்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளாரே. அதிலிருந்து என்ன கருத்தைப் பெற முடியும்?"

அதற்கு சேசு சபை பொது அதிபர்: "பல அம்சங்களில் சவேரியார் அவர் வாழ்ந்த காலத்தின் கருத்துக்களைச் சார்ந்தவராகவே இருந்தார். பாரீஸில் அவர் கற்ற இறையியல், மற்றும் அவர் வாழ்ந்த சமயச் சூழ்நிலையின் கட்டாயத்தாலும் ஒரு ஆன்மா மீட்படைய ஞானஸ்நானம் மிகவும் அவசியம் என்ற கருத்தைக் கொண் டிருந்தார். ஆனால் அவர் ஜப்பானுக்கு வேதம் போதிக்கச் சென்றபோது அங்கே ஞானஸ்நானம் பெறாததால் தங்களது முன்னோர்கள் நரகத் தீர்ப்பை அடைந்தார்கள் என்று சொல்லப் பட்டதைக் கேட்டு வேதனையடைந்து துக்கத்தில் ஆழ்ந்த ஜப்பானியர்களைக் கண்டு விசனப்பட்ட சவேரியார் தனது போதனையை மாற்றிக்கொண்டார். அதன் பிறகு கடவுளின் இரக்கத்தையே போதிக்கலானார். **ஞானஸ்நானம் இல்லாமல் நேரிய வாழ்வு கொண்டவர்களும் மீட்படைந்தார்கள்** என்று போதித்தார். இன்று திருச்சபையிலும், 2-ம் வத். சங்கத்தாலும் வழிநடத்தப்படும் நாம் **சத்தியத்தின் விதையானது எல்லா மனிதர்களிடமும் காணப்படுகிறது என்பதையும், கிறீஸ்துவை அறிய வராதவர்கள்கூட கடவுளின் மீட்பைப் பெற்றுக் கொள்வார்கள்** என்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் இந்த

சத்தியப் போதனை (doctrine) சவேரியார் காலத்தில் இல்லை" என்று பதிலளித்தார். சற்று மேலோட்டமாக இந்தப் பேட்டியைப் பார்த்தால், நியாயமானதாகத் தெரிந்தாலும் அதில் தப்பறைகள் மறைந்திருப்பதைக் காணலாம்.

சேசு சபையின் பொது அதிபர் பேட்டியில் கிறீஸ்துவை அறியாதவர்களும் ஞானஸ்நானம் இல்லாமலே இரட்சிக்கப் படுவார்கள் - அர்ச். சவேரியாரும் ஜப்பானில் தமது போதனையை மாற்றிக்கொண்டு சர்வேசுரனின் இரக்கத்தையே போதித்தார். இதன் மூலமாக அவர் 2-ம் வத். சங்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். 2-ம் வத். சங். போதனைகளை அன்றே சவேரியார் ஏற்றுக்கொண்டார் என்ற நச்சுக் கருத்துக்கள் காணப்படுகிறது. இது சரியா?

## நமது பதில்!


அர்ச். சவேரியார் பாரீஸில் உண்மையான பாரம்பரிய வேதசாஸ்திரத்தைத்தான் கற்றார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் 2-ம் வத். சங்கம் தரும் நவீன இறையியலைக் கற்கவில்லையென்பது நிச்சயம்! ஜப்பானில் நடந்ததாக சேசு சபை அதிபர் குறிப்பிடுவது பற்றி அர்ச். சவேரியாரின் கடிதங்கள் என்னக் கூறுகின்றன என்பதை முதலில் பார்ப்போம். 1552 ஆம் ஆண்டு ஜனவரி 29-ம் நாளன்று கொச்சி (இந்தியா) யிலிருந்து எழுதப்பட்ட நீண்ட கடிதத்தின் இறுதியில் "...ஞானஸ்நானத்திற்கு முன்பாக, இந்த யாமகூய்ச்சி நகரின் மக்கள் சர்வேசுரனின் உந்நதமான நன்மைத்தனத்தைக் குறித்து பலத்த சந்தேகம் கொண்டிருந்தார்கள். நாங்கள் வேதம் போதிக்க வருவதற்கு முன்பாகவே தன்னைக் கடவுள் வெளிப்படுத்தாததால் அவர் இரக்கமுள்ளவராக இருக்க முடியாது. (நாங்கள் கூறியபடி) கடவுளை ஏற்றுக்கொண்டு ஆராதிக்காதவர்கள் அனைவரும் நரகத்திற்கு செல்வார்கள் என்பது உண்மையானால், கடவுள் அவர்களது முன்னோர்கள் மட்டில் இரக்கமில்லாமல் நடந்து கொண்டார், எப்படியெனில், தன்னைப்பற்றிய உண்மைகளை கொடுக்காமலே அவர் அவர்களை (முன்னோர்களை) நரகத்திற்கு அனுப்பி விட்டார்.

அவர்கள் சர்வேசுரனை ஆராதியாததற்கு இருந்த காரணங்களில் (இச்சந்தேகம்) பெரிய காரணமாக இருந்தது. உண்மையை உணர்ந்து கொள்ளவும், அவர்களது சந்தேகத்தைத் தீர்க்கவும் நமதாண்டவர் சித்தம் கொண்டார். அவர்களின் சந்தேகத்தை தீர்க்க, சர்வேசுரனின் சட்டமானது எப்படி மனிதர்களின் உள்ளங்களில எழுதப்பட்டிருக்கிறது என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கினோம். சீன நாட்டுச் சட்டங்கள் ஜப்பானுக்கு வருவதற்கு முன்பே ஜப்பானியர்கள் களவு செய்வது தவறு, பொய்சாட்சி கூறுவது தவறு. அதாவது 10-ம் கற்பனைக்கு விரோதமாகச் செயல்படுவது தவறு என்பதையும் அறிந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் கூறினோம். அவர்கள் செய்வது தீமையானது என்று அவர்களது மனச்சாட்சியின் உறுத்தலிலிருந்து (எச்சரிக்கை) அறிந்திருப்பார்கள். அவ்வாறு தீமையை விலக்கி, நன்மையை செய்வது கடமை என்பதை மனிதர்கள் தங்கள் உள்ளங்களில் அறிவர். இப்படியாக அஞ்ஞானிகள்கூட சர்வேசுரனின் கற்பனை களை, எல்லா மனுக்குலத்தை சிருஷ்டித்தவரால் உணர்த்தப்பட்டு, வேறு யாரும் போதிக்கும் முன்பாகவே அறிந்திருந்தனர்.

மலைப்பிரதேசங்களில் பிறந்து எந்த ஒரு சட்டங்களையும் அறியாத ஒரு மனிதனை உதாரணமாக எடுத்துக்கூறி அவர்களது சந்தேகங்களைத் தீர்க்க முயன்றோம். அவனுக்கு எழுதப்படிக்கவும் தெரியாது. காட்டில் பிறந்த அந்த மனிதனை அவர்கள் பத்து கற்பனைகளில் உள்ளபடி, கொலை செய்வது பாவமா? களவு செய்வது பாவகரமானதா என்றோ, அவற்றை செய்யாமல் தவிர்ப்பது நல்லதுதானா என்று கேட்போம். அவன் காட்டுமிராண்டியாக இருந்தாலும் அவன் கூறும் பதிலிலிருந்து, அவனுக்கு வேறு யாரும் கற்றுக் கொடுக்காத நிலையிலும் எப்படி சர்வேசுரனின் சட்டத்தை அறிந்து கொண்டான் என்பது அவர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டனர். அது தவறு, தீயது என்று அவனுக்கு யார் சொல்லி கொடுத்தது? அவனைப் படைத்த சர்வேசுரனேயல்லாமல் வேறு யார் அவனுக்கு கற்பித்திருக்க முடியும்? காட்டுமிராண்டிகளிடமே இத்தகைய ஒரு அறிவு இருக்குமானால் விவேகமான மக்களிடம் எவ்வளவு இதனைப்பற்றிய அறிவு இருக்காது? ஆகையால் சட்டங்கள் எழுதப்படுவதற்கு முன்பாகவே, சர்வேசுரனுடைய சட்டமானது மனிதர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டு விட்டது. இதன்படி அவர்கள் நடந்து அவரைப் பிரியப்படுத்த வேண்டும். இந்த விளக்கம் அவர்களைத் திருப்திபடுத்தியது. இந்த சந்தேகத்தை அகற்றியது, அவர்கள் மனந்திரும்புதலுக்கு பெரிய உதவியாக இருந்தது..." என்றுக் குறிப்பிடுகிறார்.

மேற்கூறப்பட்ட அர்ச். சவேரியாரின் கடிதத்தின் ஒரு பகுதி, சேசு சபை அதிபரின் சவேரியாரைப் பற்றியக் கருத்துகளுக்கு எதிர்மாறாக இருக்கிறது. ஆக, அர்ச். சவேரியார் ஞானஸ்நானத்தைப் பற்றிய தனது போதனையை ஒரு போதும் மாற்றினது இல்லை. "ஞானஸ்நானம் இல்லாமல் நேரிய வாழ்வு கொண்டவர்களும் மீட்படைவார்கள்" என்ற சேசு சபை அதிபரின் கூற்று சம்பந்தமாய் திருச்சபையினுடைய மாறாத போதனை என்னவென்றால்: மனிதனுடைய கடைசி கதி (இலக்கு) சுபாவத்திற்கு மேற்பட்டதாக (Supernatural) இருக்கிறபடியால், மனிதனுடைய சுபாவத்திற்கு அடுத்த (Natural) நேரிய வாழ்க்கையினால் மட்டும் இரட்சிக்கப்பட முடியாது. (இந்நேரிய வாழ்வு மனிதனை வரப்பிரசாதத்திற்கு தயார் செய்கிறதே தவிர, வரப்பிரசாதத்திற்கு மாற்று அல்ல). இரட்சிக்கப்படுவதற்கு சுபாவத்திற்கு மேற்பட்ட, விசுவாசம் என்ற தேவசம்பந்தமான புண்ணியம் அவசியம்! "**ஞானஸ்நானம் இல்லாமல் நேரிய வாழ்வு... கடவுளின் மீட்பைப் பெற்றுக் கொள்வார்கள்**" என்ற சங். பீட்டர் ஹான்ஸ் கோல்வென்பாக் சுவாமியின் வார்த்தைகள், *அஞ்ஞானி தன்னிடத்தில் ஒரு இயற்கையான (ஒழுக்க நெறி மற்றும் சமய) ஒளியை (அறிவை) கொண்டிருக்கிறான்; அதை தன்னுடைய சொந்த பாவங்களால் அணைத்து போடாமல், மாறாக அதன் பிரகாரம் தன்னுடைய வாழ்வை கிரமப்படுத்தி வந்தால், அது இரட்சண்யத்தின் பாதைக்கு அவனைக் கொண்டு செல்கிறது. ஏனெனில் அனைவருடைய இரட்சண்யத்தையும் விரும்பும் சர்வேசுரன், மனிதன் தான் இரட்சண்யம் அடைவதற்கு தன்னால் ஆன அனைத்தையும் செய்வானாகில் அவனுக்கு தன்னுடைய (சர்வேசுரனுடைய) வரப்பிரசாதத்தை மறுக்கமாட்டார்* என்று பொருள்படுமாகில் அக்கருத்து திருச்சபையின் பாரம்பரிய போதனைக்கு ஒத்து இருக்கிறது. 2-ம் வத். சங்கமும் புதிதாக ஒன்றை போதிக்கவில்லை. மாறாக, *சுத்தக்கருத்துடைய* ...தொடர்ச்சி 12-ம் பக்கம் காண்க.

# வேதசாட்சிய ஆவல்!



அர்ச். அவிலா தெரசம்மாள்

அர்ச். அவிலா தெரசம்மாளுக்கு ஒரு வயது இருக்கும் போது, அவளும், அவளது சகோதரன் ரோட்ரிக்கும் ஒவ்வொரு நாளும் அர்ச்சிஷ்டவர்களது வரலாறுகளை வாசிப்பார்கள். பரிசுத்த காரியங்களைப் பற்றி பேசுவார்கள். "நித்தியம்" என்னும் நினைவு அவர்களது இளம் உள்ளத்தில் பதிந்தது. "நித்தியம்! நித்தியம்! நித்தியம்! பரிசுத்தவான்கள் சர்வேசுரனை நித்தியத்துக்கும் பார்த்து அனுபவிப்பார்கள்" என்று அடிக்கடி சொல்வார்கள்.

வனவாசிகளைப் போல சர்வேசுரனுக்காக அனைத்தையும் துறந்து வாழ தங்கள் தந்தையின் தோட்டத்தில் சிறு குடிசைகளைக் கட்டத் தொடங்குவார்கள். அவர்கள் சிறுவர்களாதலால் அது முற்றுப் பெறாமல் போனது! வேதசாட்சிகள் எவ்வளவு எளிதாக மோட்சத்தை சம்பாதித்துக் கொண்டனர் - அற்ப நேரம் நீடித்த வேதனைக்கு சன்மானமாக நித்திய பேரின்பத்தைப் பெற்றுக்கொண்டார்களே. ஏன்? நாமும் இவர்களைப் போல் வேதசாட்சியமடையக் கூடாது என்று எண்ணலாயினர். ஒரு நாள் யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பி, முகமதியர் நாட்டுக்குச் சென்று வேதத்திற்காக உயிரைக் கொடுக்க ஆசித்தனர். நல்ல வேளையாக உறவினர் ஒருவர் கண்ணில் பட்டதால் அவர்கள் வீட்டிற்குத் திரும்பவும் அழைத்து வரப்பட்டனர்!

சிறுவயதில் அவளது வேதசாட்சிய ஆவலே பிற்காலத்தில் கார்மெல் சபையைப் புதுப்பித்து துவக்கத் தூண்டுதலாக அமைந்தது!

# நான் கிறீஸ்தவன் அஞ்சமாட்டேன்!

தூர் நகர் மேற்றிராணியாரான அர்ச். மார்டின் இளைஞராக இருக்கையில் ஒரு சமயம், ஆல்ப்ஸ் மலை மீது போய் கொண்டிருந்தார். திருடர்கள் அவரைப் பிடித்தார்கள். அவர்களில் ஒருவன் அவரைக் கொல்ல வாளை ஓங்கினான். ஆனால் மார்டின் எதற்கும் பயமின்றி இருந்தார். அதனைக் கண்டு அதிசயித்த திருடர்கள், "நீ யார்? உன்னைக் கொல்ல நீட்டப்பட்டிருக்கும் வாளைக் கண்டு நீ பயப்படவில்லையா?" என்று கேட்டனர். அதற்கு அர்ச். மார்டின் "நான் கிறீஸ்தவன். ஆகையால் நான் அஞ்சுவதில்லை. ஏனெனில் வாழ்விலும், சாவிலும் எங்களைக் காக்க சர்வேசுரன் எப்போதும் தயாராக இருக்கிறார். ஆபத்துக்கள் சூழ்ந்த வேளையில் அவர் மிகவும் அருகில் இருக்கிறார்" என்று கூறியவர் மீண்டும் "ஒரே ஒரு காரியம் மட்டும் எனக்குத் துயரத்தை அளிக்கிறது. அதாவது, நீங்கள் இவ்வாறு துர் வாழ்க்கை நடத்துகிறீர்களே; சர்வேசுரனுடைய பொறுமையையும், இரக்கத்தையும் பழிக்கிறீர்களே என்றறிந்து நான் கவலைப்படுகிறேன்" என்று நயமாகக் கூறினார். அவரது தைரியத்தையும், அதைக் கொடுக்கும் தெய்வ நம்பிக்கையையும் பாராட்டி அத்திருடர்கள் பின்னர் மனம் மாறி கிறீஸ்தவர்களானார்கள்.

# கிறீஸ்தவர்களின் கடவுளை கூவியழை!

ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் நாட்டை **குளோவிஸ்** என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அவிசுவாசியானாலும் புண்ணியவதியும், கிறீஸ்தவளுமான புனித குளோத்தில்தம்மாளை மணம் முடித்திருந்தான். தமது கணவன் மனந்திரும்பி கிறீஸ்தவனாக வேண்டுமென்று தினமும் மன்றாடி வந்தாள்.

அச்சமயம் அண்டை நாட்டு அரசன் பிரான்ஸ் நாட்டை அச்சுறுத்தி வந்ததால் அவன் மீது குளோவிஸ் படையெடுத்துச் செல்லத் தீர்மானித்தான். அவன் போருக்குப் போகும் முன் குளோத்தில்தம்மாள் அவனிடம், "போர் கடினமாயிருந்தால், கிறீஸ்தவர்களது கடவுளின் உதவியைக் கூவியழையுங்கள். விக்கிரக ஆராதனையை விட்டுவிடுவதாக வாக்களியுங்கள்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். அதன் பேரில் கிறீஸ்தவர்களின் கடவுளை மன்றாடியதால் அரசன் வெற்றி பெற்றான். அதனால் மெய்மறையில் சேர்ந்து கிறீஸ்தவனானான்.

---

11-ம் பக்கம் தொடர்ச்சி...

*அஞ்ஞானியாகிய ஒருவன் தன்னுடைய சொந்த நேரிய வாழ்க்கையினால் (வரப்பிரசாதமின்றி சுபாவத்திற்கு மேற்பட்ட தேவ சம்பந்தமான புண்ணியமாகிய விசுவாசமின்றி இஸ்பிரீத்துசாந்துவின்றி) இரட்சித்துக் கொள்வான்* என்று பொருள்படுமாகில் 2-ம் வத். சங்கம் புதிதாய் ஒன்றைப் போதிக்கிறது; திருச்சபை ஏற்கனவே பன்முறை இக்கருத்தை கண்டித்துள்ளது; இதை உண்மையான கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அர்ச். சவேரியாரும் இதைப் போதிக்கவில்லை, அவர் 2-ம் வத். சங்கத்தின் முன்னோடியல்ல!

(இக்கட்டுரை Courrie de Rome, dt. February 2007 - Pp 6-8 மற்றும் SSPX, Asia News Letter dt. May-Sept. 2007 - ஐ தழுவி எழுதப்பட்டது).

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவதாயின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (5) தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசு கிறீஸ்துவின் மனிதாவதாரத்தின் பரம இரகசியத்தை அறிவிக்க விண்ணிலிருந்து அனுப்பப்பட்ட கபிரியேல் சம்மனசானவர் அர்ச். கன்னிமரியம்மாளைப் பார்த்து ... தேவ வரப்பிரசாதத்தினால் நிறைந்தவளே வாழ்க! (லூக். 1:28) என்று வாழ்த்தினார். ஆம்! மகா பரிசுத்த கன்னிமரி "தேவ வரப்பிரசாதத்தால்" நிறைந்து, – பிரியதத்தத்தினால் – பூரணமானவர்களாக இருக்கிறார்கள். எப்படியெனில் அவர்கள், அந்த தேவ வரப்பிரசாதத்திற்குக் காரணமானவரின் தாயானதால், அதை பெற்றுத் தரும் வாய்க்காலாய் ஆனதால், அவர்கள் தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே, என்று அழைக்கப்பட முழுத் தகுதியானார்கள்.



### தேவ வரப்பிரசாதம் என்பது என்ன?

சேசு கிறீஸ்துநாதர் மனிதாவதாரமெடுத்து கடினமான பாடுகளையும், கொடிய மரணத்தையும் அனுபவித்து மனுக்குலத்திற்கு இரட்சண்யத்தை பெற்றுக் கொடுத்தார். அதோடு நாம் மோட்சம் வந்து சேர நமக்கு உதவியாக இருக்கும்படியாக விலைமதிக்கப்படாத பொக்கிஷங்களான பேறுபலன்களையும் சம்பாதித்தார். அவரது அந்த பேறுபலன்களை (Merits) முன்னிட்டு சர்வேசுரன் நமக்கு இலவசமாக கொடுக்கும் சுபாவத்திற்கு மேற்பட்ட வரமே **தேவ வரப்பிரசாதம்** (Divine Grace) என்று அழைக்கப்படுகிறது. தேவ வரப்பிரசாதம் நம்மிடமிருக்குமானால் நாம் சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாயிருப்போம். அவ்வரப்பிரசாதத்தின் உதவியின்றி நாம் மோட்சம் சேருவது என்பது கூடாத காரியம். தேவ வரப்பிரசாதம் ஒவ்வொருவரின் ஆத்துமத்தின் நிலையையும், தேவ சிநேகத்தின் அளவையும் பொறுத்திருக்கும்.

### தேவதாய் – தேவ வரப்பிரசாதத்தின் மாதா – எப்படி?

(1) மகா பரிசுத்த கன்னிமரியம்மாள் தேவ வரப்பிரசாதத்தால் நிரம்பியுள்ளார்கள். "மண்ணுலகில் பிறந்த யாவருக்கும் தேவ வரப்பிரசாதம் ஓர் அளவோடு மட்டுமே கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் இரட்சகரைப் பெற்ற நமது பரிசுத்த அன்னைக்கோ பூரணமாக வழங்கப் பட்டுள்ளது" (Serm 143) என்கிறார் அர்ச். கிறீஸ்ஸோலாகோஸ் இராயப்பர். ஏனெனில் கன்னி மாமரி உன்னத பிதாவாகிய சர்வேசுரனின் ஏக மகள்; சுதனாகிய சர்வேசுரனின் அன்பு மாதா; திவ்விய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனின் நேச பத்தினியாக இருக்கிறார்கள். இவ்வளவு மேலான பாக்கியம் பெற்ற கன்னிமரியாயிடம், அவர்களுடைய இந்த உந்நதமான அந்தஸ்துக்கேற்றபடி தேவ வரப்பிரசாதம் பரிபூரணமாக நிறைந்து விளங்குகிறது. இதனால் தான் மங்கள வார்த்தை உரைக்க வந்த கபிரியேல் தூதர் "மரியே" என்னும் அவர்களது மகிமை நிறைந்த பெயரை முதலாய் உச்சரிக்காமல் "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே, வாழ்க" (லூக். 1:28) என்று வாழ்த்தி அழைத்தார். (பிரியதத்தம் என்பது தேவ வரப்பிரசாதம் என்க.) இது ஒன்றே, சகல படைப்புகளுக்கும் மேலாக மாதா கொண்டுள்ள சகல வரப்பிரசாதங்களின் பொலிவை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இக்கன்னிகையிடமிருந்தல்லவா வரப்பிரசாதங்களின் ஊறணியான தேவ சுபாவத்தின் 2-ம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் பிறந்தார்? இப்படிப் பார்த்தாலும் பரி. கன்னிமரியம்மாள் தேவ வரப்பிரசாதத்தின் மாதா என்றழைக்கப்படுவது தகுமே.

(2) சேசு கிறீஸ்துவே, தேவ வரப்பிரசாதமானவர். அவரே அதன் ஊற்று. அதோடு அவரே நமக்கெல்லாம் இரட்சண்யம் பெற்றுத் தந்து நம்மை தேவ மக்களாக மாற்றியவர். ஆகவே அவர் நமது சகோதரர்! எனவே, கிறீஸ்துவாகிய அவரின் தாய் – நம்முடைய தாயாக இருக்கிறார்கள். அதோடு அவரால் சிலுவையில் "இதோ உன் தாய்" என்று நமக்கு மாதாவாக கொடுக்கப்பட்டவர்கள். ஆம்! நமக்கு தமது பாடுகளாலும், மரணத்தாலும் தேவ வரப்பிரசாதப் பொக்கிஷங்களை சம்பாதித்து தந்தவரின் தாய், நமக்கெல்லாம் அன்னை என்பதாலும் கூட மாமரி "தேவ வரப்பிரசாதத்தின் மாதா" என்று அழைக்கத் தகுதி பெறுகிறார்கள்.

(3) மகா பரிசுத்த கன்னிகை வரப்பிரசாதமாகவே இருக்கிற தேவனின் தாயானது மட்டுமல்லாது, வரப்பிரசாதத்தால் நிரப்பப்பட்டிருப்பது மட்டுமல்லாது, மனிதர்களுக்கு அவற்றை – வரப்பிரசாதத்தை வழங்கும் தாயாகவும் இருக்கிறார்கள். எப்படியெனில் தேவதாய் எலிசபெத்தம்மாளை சந்தித்தபோது, அவள் வயிற்றிலிருந்த ஸ்நாபக அருளப்பரை அர்ச்சித்தார்கள். அவரது ஜென்மப்பாவம் நீங்க வரப்பிரசாதத்தை வழங்கினார்கள். "வயிற்றிலுள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று" (லூக். 1:44). ஏனெனில் மாதா சர்வேசுரனின் அனைத்து வரப்பிரசாதங்களின் பொக்கிஷபதியாக இருக்கிறார்கள் என்கிறார் அர்ச். பெரிய ஆல்பர்ட். ஒரு தாய் தன்னிடமுள்ளவைகளை தன் பிள்ளைகளுக்கு கொடுக்கும் குணமுடையவள். பரி. கன்னிமரியாயும் தாயாக இருப்பதால், அதுவும் அனைத்து தாய்மார்களை விட உந்நத அன்னையாக இருப்பதால் தம்மிடம் நிரம்பியுள்ள, தேவ வரப்பிரசாதங்களை தமது பிள்ளைகளான நமக்கு அன்போடு, கரிசனையோடு வழங்கும் மாதாவாக இருக்கிறார்கள்.

எனவே தேவதாயை **தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே** எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று பிரார்த்திப்போமாக.

# ¶ìß. zwÍç>¼Ä·s[Ø>«ÄD\V¹[åuïòçð©ÃÂ]¥D, Amå[ç\ØÃÅE®kÐÂz ¶k^WïµÝ]BAmç\¥D!

**"தினமும் நம் திவ்விய சேசு பொன்னாலான பூசை பாத்திரத்திற்குள் வந்து தங்குவதற்காக மோட்சத்திலிருந்து வரவில்லை. மாறாக, நமது ஆத்துமங்கள் என்னும் மற்றொரு மோட்சத்தைக் கண்டடைந்து அங்கு தங்கி மகிழும்படியாக வருகிறார்"**

– அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள்.

அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் நற்கருணை சேசுவிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தாள். அவள் புதுநன்மை பெற்ற நாள் அவளுக்கு மிகவும் உந்நதமான நாளாக இருந்தது. அதனைப்பற்றி தமது சுயசரிதையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடு கிறாள்:


"திவ்விய சேசுவின் முதல் அரவணைப்பு எவ்வளவு இனிமையாக இருந்தது! அது மெய்யாகவே சிநேகத்தின் அரவணைப்பாக இருந்தது. நான் அவ்வாறு சிநேகிக்கப்பட்டதை உணர்ந்தேன். உடனே நான், "தேவரீர்! நான் உம்மை நேசிக்கி றேன். என்னையே உமக்கு என்றென்றைக்குமாக ஒப்புக் கொடுக கிறேன்"என்று கூறினேன். திவ்விய சேசு என்னிடம் ஒன்றையும் கேட்கவில்லை. திவ்ய சேசுவும் சின்ன தெரசும் ஒருவர் ஒருவரைப் பற்றி நன்கு அறிந்து, புரிந்து கொண்டிருந்தனர். அன்றைய எங்களின் சந்திப்பானது, ஒரு எளிமையான அறிமுகத்தைவிட மேலான விதத்தில் அமைந்த உத்தம ஐக்கியமாகத் திகழ்ந்தது. நாங்கள் இருவராக இருந்த நிலை இனிமேல் இல்லாமல் போனது. பரந்து விரிந்திருக்கும் மாபெரும் சமுத்திரத்தில் மறைந்து போன ஒரு துளி தண்ணீரைப்போல் தெரஸ் மறைந்து போனாள். திவ்விய சேசு மட்டும் இருந்தார். அவர் தான் எல்லாவற்றிற்கும் திவ்விய கர்த்தர்! பேரரசர்!"

அவளது தேவசிநேகம், விசுவாசம் எவ்வளவுக்கு உயர்ந் திருந்தது என்பதை மேற்கண்ட குறிப்பிலிருந்து காணமுடியும். புதுநன்மை வாங்க மிகவும் ஆசித்து அதற்காக தன்னையே தயாரித்தாள். அவள் திவ்விய நற்கருணையை வாங்க எவ்வள வுக்கு ஆசித்தாள் என்பதை கீழ்க்கண்ட சம்பவம் எடுத்துக்காட்டும்.

அவள் மிகச் சிறுபிள்ளையாக இருக்கும் போது தன்னை யும் கிறிஸ்துமஸ் இரவு பூசைக்குக் கூட்டிச் செல்லும்படி தன் மூத்த அக்காளிடம் கெஞ்சிக் கேட்டாள். ஏனெனில், இரவு நேரத்தைச் சாதகமாக்கி பீடத்தில் சின்ன சேசுவைத் எடுத்துக் கொண்டு வந்துவிடுவது அவளது எண்ணம். வெகுளியாக அக்கா ளிடம் "நான் உன் பக்கத்தில் நுழைந்து விடுகிறேன். யாரும் என்னைப் பார்க்க மாட்டார்கள். நான் அப்படிச் செய்யட்டுமா?" என்று கேட்டாள். அதற்கு அவள் அக்காள் மறுத்து விட்டதால் சின்ன சேசு அன்று தப்பித்தார்!

### குணமடைந்த சிறுவன்!

அர்ச். தெரசாள் திவ்விய நற்கருணையிலிருக்கும் சேசுவின் மேல் மிகுந்த பக்தியார்வத்தைக் கொண்டிருந்தாளென்றால் அவள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தநாள் முதல் புதுநன்மை வாங்க சிறுவர் களுக்கு தம் மன்றாட்டின் மூலம் விசேஷ உதவியளித்து வருகிறாள்.



அப்படி அவளிடம் விசேஷ சலுகை பெற்ற ஒரு சிறுவனின் கதையைப் பார்ப்போம்.

பொலோஞ்சுர்மெர் என்ற இடத்தில் ஒரு சிறுவன் இருந்தான். 12 வயதான அவன் மூன்று வருடங்களாக கன்னத்தில் ஏற்பட்ட ஒரு கட்டியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். அக்கட்டி அவனுடைய தோள்பட்டை வரை நீண்டு பெரிதாகி யிருந்தது. அதனால் அவன் உருவமே மாறிப்போயிற்று.

கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றவும் முடியாது என்று மருத்துவர்களும் கைவிரித்து விட்டனர். எனவே அவனது பெற்றோர், கட்டிக்கு மருந்திடாமல் புண்களை மட்டும் சுத்தம் செய்து கொண்டு அவனை வீட்டிலேயே வைத்திருந்தனர்.

1915-ம் வருடம் ஏப்ரல் மாதம் அச்சிறுவன் ஏறக்குறைய சாகும் தருவாயில் இருந்தான். இப்போது அவனுடைய தாடை எலும்பு உதட்டைக் கிழித்துக் கொண்டு வாய்க்கு வெளியே நீட்டிக்

கொண்டிருந்தது! அவனது பயங்கரமான உபாதைகளைக் கண்ட எல்லோரும் அவன் மரிப்பதே நல்லதென்று விரும்பினர்.

அவனுடைய தாய் அவனுக்கு புதுநன்மையாவது கொடுக்கலாம் என்ற உணர்வால் தூண்டப்பட்டு புதுநன்மைக்கு சிறுவர்களைத் தயார் செய்யும் ஓர் பெண்மணியின் வீட்டிற்கு அவனைக் கொண்டு சென்றாள். அந்த சிறுவன் மீது அனுதாபம் கொண்ட அப்பெண்மணி, தான் ஞானஉபதேசம் கற்றுக்கொடுத்து புதுநன்மைக்கு தயாரிக்கும் 12 சிறுவர்களிடம், அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளிடம் அச்சிறுவனுக்காக நவநாள் செய்யும்படி கேட்டுக்கொண்டாள். நோயால் அவதியுற்ற அந்த ஏழைச் சிறுவனும், அவர்களோடு சேர்ந்து தானும் புதுநன்மை வாங்க உதவவேண்டும் என்று வேண்டிக் கொண்டான். நாட்கள் நகர்ந்தன. சிறுவனிடம் எந்த மாற்றமும் இல்லை. சிறுவர்கள் அதைரியப் படாமல் தொடர்ந்து மன்றாடிக்கொண்டு வந்தனர்.

புதுநன்மை வாங்குவதற்கு முந்தினம் இரவில் அவனில் அதிசயம் நிகழ்ந்தது! ஆம்! அவனது கட்டியினால் ஏற்பட்ட புண், ரணம் முழுவதுமாக ஆறிவிட்டிருந்தது! வாய் வழியே தெரிந்த எலும்புகள் அதனிடத்தில் பொருந்தி, கன்னம், வாய் அனைத்தும் மூடி பூரண குணமடைந்தான்!

தன்னைக் குணமாக்கிய அர்ச். குழந்தை தெரசம்மாளுக்கு நன்றி கூறியவனாக மகிழ்ச்சியோடு மற்ற சிறுவர்களோடு புதுநன்மை வாங்கினான்!

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

**விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன –** (ஆசிரியர்)

## பரலோக மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**(6) பிறருக்குக் கஸ்தி வருத்தம் வருவித்தவன்,** சேசுநாதர்சுவாமியின் கட்டளைப்படி, சமாதானமாய்ப் போகவேண்டியது. பெரியவன் ஒருவன் தனக்குக் கீழ்ப்பட்டவனுக்கு வருத்தம் வருவித்திருப்பானாகில், பொறுத்தல் கேளாதேபோனாலும், சமாதானமாய்ப் போகத்தக்க வழிபார்த்து, யாதொரு உதவி உபகாரமாவது செய்யவேண்டியது. வேறொருவன் குற்றம் செய்து நம்மைக் கஸ்திப்படுத்தியிருந்தால், முழுமனதோடே மன்னித்துத் திரும்பவும் சமாதானமாகும்படி மெய்யான ஆசைப்படவேண்டும். தின்மைக்குப் பதில் தின்மை செய்வதை விட, எந்த அநியாயத்தையும் அநுபவிக்கத் தயாராயிருக்கக்கடவோம்.

**பிரவேசிப்பியாதேயும்:–** சர்வேசுரன் மட்டில்லாத அர்ச்சிஷ்டதனம் உள்ளவராயிருக்கிறபடியினாலே, மனுஷன் பாவத்தில் விழும்படி அவர் ஒன்றும் செய்யமாட்டாரென்பது குன்றாத சத்தியம்.

**(1) சோதனை வருவதற்கு முகாந்தரமென்ன? –** பசாசும் கெட்ட சுபாவமும் பல சோதனைகளை நம்மிடத்தில் எழுப்பும்படி சர்வேசுரன் விட்டுவிடும் போது, அந்த சமயத்தில்தானே அவைகளை ஜெயிக்கிறதற்கு வேண்டிய உதவியும் தந்தருளுகிறார். நாம் அந்த வரப்பிரசாதத்தை ஏற்றுக்கொண்டு போராடினால், ஜெயம் அடைவதுமன்றி, அநேக பேறுபலன்களையும் பெற்றுக்கொள்வோமென்பது நிச்சயம்.

**(2) இந்த மன்றாட்டில் நாம் கேட்கிறதென்ன? –** சர்வேசுரன் நமக்கு எவ்வித சோதனையும் வரவிடக்கூடாதென்று நாம் கேட்கிறதில்லை. ஆனால் நமது பெலனுக்கு மேற்பட்ட சோதனைகள் வராதபடிக்கும், நாம் அவைகளில் சோர்வை அடையாதபடிக்கும் மன்றாடுகிறோம்.

**பாவ சமயத்தின்பேரில் வேணுமென்று தன்னைத் தானே பாவத்துக்கேதுவான ஆபத்துக்கு உட்படுத்திக் கொள்ளு கிறவன்** அந்த ஆபத்தான சோதனையிலிருந்து தப்பிப்போவதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களைச் சர்வேசுரனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுவேன் என்று நம்புகிறது வீண். தயாளமுள்ள சர்வேசுரன் தங்களால் கூடிய பிரயாசையெல்லாம் எடுத்துக் கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரம் உதவி செய்வதாக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். சரியான முகாந்தரமில்லாமல், மனசார பாவத்துக்கு ஏதுவான சமயத்தை விட்டு விலகாமலிருப்பதே பாவமாகும்.

**(1) யாதாமொரு வெளிக்காரியம் தன்னிலேயாவது ஒரு மனுஷனுடைய குணத்தினாலேயாவது பாவத்தில் விழுவதற்கு ஏதுவாயிருந்தால், அது பாவ சமயம்** என்று சொல்லப்படும்.

**(2) பாவசமயத்தினின்று விலகக்கூடியவர்களா யிருந்தும் அதை விட்டு நீங்க மனமில்லாதவர்களுக்கு குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்கலாகாது.** ஏனெனில், பாவப்பொறுத்தலடைய வேண்டுமானால் முதலில் அவன் அப்பாவச் சந்தர்ப்பத்தை விட்டு விலகி நடப்பேனென்று வாக்கு கொடுக்க வேண்டியது. அப்படியே ஏதாவது ஒரு புத்தகத்தை வாசிப்பதினாலும், கெட்டத் தோழர்களோடு சகவாசம் பண்ணுவதினாலும், கூத்து நாடகம் பார்ப்பதினாலும், தகாதவர்கள் வீட்டிற்குப் போவதினாலும், ஒருவன் நினைவு ஆசை வார்த்தையினாலாவது, கிரியைகளினாலாவது, அடிக்கடி சாவான பாவத்தில் தான் விழுகிறதாக அறிந்திருக்கிற போது, பாவப்பொறுத்தல் அடைவதற்கு இச்சமயத்தை விட்டுவிலக உறுதியான பிரதிக்கினை செய்கிறது முற்றிலும் அவசியம். இப்படிச் செய்யாமல் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவன் குருவானவரை ஏமாற்றலாம். ஆனால் சர்வேசுரனை ஏமாற்ற முடியாது.

**(3) பாவச்சந்தர்ப்பம் நிறைந்த ஆபத்தான சூழ்நிலை யில் ஜீவிக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறவர்கள்,** ஆத்தும குரு காண்பிக்கும் வழிமுறைகளை அநுசரித்து, மிகவும் விழிப்பாயிருந்து, அடிக்கடி ஜெபம் செய்து, தேவதிரவிய அனுமானங்களைப் பெற்று, பாவத்தில் விழாதபடி எல்லா முயற்சிகளும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சரியான மனஸ்தாபம் இல்லாமலும், தகுந்த பிரயாசைப் படாமலும், திரும்பத் திரும்ப பாவத்திலே விழுகிறவர்களுக்கு குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்கக் கூடாது. எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும், அவர்கள் பாவத்திற்கு அடுத்த சமயம் அகத்தியம் விலக்கி நடக்க வேண்டியது. நமது கண், கை, ஆஸ்திபாஸ்தி முதலியவை நமக்கு இடறலாயிருந்தால், கண்ணைப் பிடுங்கி, கையை வெட்டி, சொத்துக்களைத் தள்ளி தூர எறிந்துப் போட வேண்டுமென்பது சர்வேசுரனுடைய கட்டளை. ஏனெனில்: உடல் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைவிட, உன் அவயங்களில் ஒன்று சேதமாய்ப் போவது உனக்கு நலமாம் என்று சேசு நாதர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

(தொடரும்)